www.tamilarangam.net


# தமிழர் புனர்வாழ்வுக் கழகம்
## TAMILS REHABILITATION ORGANISATION

93/2. K.K.S. ROAD. KOKKUVIL. SRI LANKA. 93/2. காங்கேசன்துறை வீதி, கொக்குவில்.


06.04.1993

பொறுப்பாளர்கள்,
சர்வதேசக் கிளைகள்,
தமிழர் புனர்வாழ்வுக் கழகம்.

அன்புடையீர்,

<u>தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் '1000 குழந்தைகளை தத்தெடுக்கும் திட்டம்' தொடர்பானது.</u>

இன்றைய நெருக்கடிகளின் மத்தியில் எதிர்கால வாழ்க்கையில் நம்பிக்கையற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள 1000 குழந்தைகளுக்கு மறுவாழ்வு வழங்குமுகமானதோர் திட்டம் தங்கள் அனைவரதும் நீண்டநாட் கோரிக்கையின் அடிப்படையில் தயாரித்து அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை வெற்றிகரமாக செயல்படுத்த தாங்கள் அனைவரும் ஒருமுகமாக முழுவேகத்துடன் செயற்படவேண்டுமென மிகவும் தயவாகக் கோருகிறோம்.

எம்முடனான தங்கள் தொடர்புகளுக்கு அவசியமேற்படின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியையும் பயன்படுத்தலாம்.

நன்றி.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழர் புனர் வாழ்வுக் கழகம்
TAMILS REHABILITATION ORGANISATION
83/2 K.K.S. ROAD KOKKUVIL SRI LANKA. 83/2. காங்கேசன்துறை வீதி, கொக்குவில்

## திட்ட அறிக்கை

திட்டத்தின் பெயர் : தொடர்கின்ற யுத்தத்தால் பெற்றாரை இழந்த அல்லது தந்தையை மட்டும் இழந்த குழந்தைகளின் பராமரிப்புக்கான உதவி.

உதவி வழங்குபவர்கள் : சர்வதேசரீதியாக இக்குழந்தைகளில் ஆர்வமுள்ள ஒவ்வொரு குடும்பத்தினரும் ஒவ்வொரு குழந்தையை பொறுப்பேற்பர்.

திட்டத்தை செயல்படுத்தும் நிறுவனம் : தமிழர் புனர்வாழ்வுக் கழகம்,
83/2, காங்கேசன்துறைவீதி,
கொக்குவில்.

திட்டம் நடைமுறையில் உள்ள காலம் : குறிப்பிட்ட குழந்தை வளர்ந்து சுயமாக உழைக்கும்வரையானது ஆகக்கூடிய காலம் குழந்தை 21 வயதை அடையும்வரையானது.

பின்னணி : இலங்கையின் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் தொடர்கின்ற யுத்தம் தமிழ்மக்களை சமூக, பொருளாதார நிலைகளில் கடுமையாகப் பாதித்துவருகிறது. வீட்டுக்குவீடு கணவனையிழந்த மனைவி, மனைவியையிழந்த கணவன், பெற்றாரையிழந்த குழந்தைகள், குழந்தைகளையிழந்த பெற்றார் என்று எங்குமே அவலங்கள்.

இன்றைய பொருளாதார சூழ்நிலைகளில் பாதிப்பிற்குள்ளானவர் மீது அடுத்தவர் அனுதாபப்பட முடியுமேயல்லாமல், அவர்களை பாதுகாக்க முடிவதில்லை. உதாரணமாக அண்ணன் இறக்க அண்ணனின் குழந்தைகளை பராமரிக்க தம்பி விரும்பினாலும் அவரது பொருளாதாரநிலை இடம்கொடுப்பதில்லை.

ஒரு குழந்தை பெற்றாரை இழந்தபின்னர் அவரது உறவினர்களுடன் வாழ வாய்ப்பிருக்குமாயின் அதனை ஊக்குவிப்பதே சிறந்ததென மனோதத்துவ நிபுணர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர். இந்தவகையில் கூடுமானவரை பெற்றாரையிழந்த குழந்தைகளை உறவினர்களுடனும், தந்தையையிழந்த குழந்தைகளை தாயாருட-

www.tamilarangam.net



வாழ வழிகாட்டுவதையே முக்கிய நோக்கமாகக் கொள்ளப்படுகிறது. இதன்மூலம் இக்குழந்தைகள் இயல்பு நிலையில் தனது மனத்தாக்கங்களை ஓரளவு குறைத்துக்கொள்ள வாய்ப்புள்ளது.

திட்டம் செயல்படும் முறை : தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இலங்கையின் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் இருந்து பாதிக்கப்பட்ட, உதவி தேவைப்படுகின்ற 1000 குழந்தைகளை தெரிவுசெய்யும். மேற்படி குழந்தையின் பாதிப்பை உள்ளூர் கிராமசேவகர் மூலமும் உதவி அரசாங்க அதிபர்மூலமும் அத்தாட்சிப்படுத்தப்படும்.

உதவிகள் வழங்கப்படவேண்டிய முறை : உதவிகள் வழங்கப்படவேண்டிய தொகைகள் மாறுபடுவதற்கு ஏற்ப வயதெல்லைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகையில் பகுக்கப்பட்டுள்ளது.

1. 01 - 03 - குழந்தைகள்
2. 04 - 05 - பாலர்கல்வி
3. 06.- 10 - ஆண்டு 5 வரை
4. 11 - 13 - ஆண்டு 8 வரை
5. 14 - 17 - பல்கலைக்கழக புகுமுக வகுப்புவரை.
6. 17 - 21 - பல்கலைக்கழகம்.

| | | |
|---|---|---|
| 1. | குழந்தைகளுக்கான உதவித்தொகை மாதாந்தம் | - 500/- |
| 2. | பாலர்கல்வி கற்கும் குழந்தைகள் | - 400/- |
| 3. | ஆண்டு 5 வரை | - 450/- |
| 4. | ஆண்டு 8 வரை | - 500/- |
| 5. | பல்கலைக்கழக புகுமுக வகுப்புவரை | - 800/- |
| 6. | பல்கலைக்கழகம் | - 1200/- |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தெரிவுசெய்யப்படும் குழந்தைகளின் மாவட்டரீதியான எண்ணிக்கை :

| | | |
|---|---|---|
| யாழ். மாவட்டம் | - | 300 |
| கிளிநொச்சி மாவட்டம் | - | 100 |
| முல்லைத்தீவு மாவட்டம் | - | 100 |
| வவுனியா மாவட்டம் | - | 100 |
| மன்னார் மாவட்டம் | - | 100 |
| மட்டக்களப்பு மாவட்டம் | - | 100 |
| திருகோணமலை மாவட்டம் | - | 100 |
| அம்பாறை மாவட்டம் | - | 100 |

ஒவ்வொரு பிரிவுக் குழந்தைகளுக்கும் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள் தனித்த ஒரு குழந்தையின் முழுமையான செலவுகளுக்கும் போதுமானதல்ல. எனினும் இக் குழந்தைகளை வைத்துப் பராமரிக்க விரும்பும் உறவினர்களுக்கு கைகொடுக்கும் நடவடிக்கையாக இத்திட்டம் அமையும்.

மேற்படி விபரத்தை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சர்வதேசக் கிளைகள் அந்தந்த நாடுகளில் பகிரங்கப்படுத்தும். இதனடிப்படையில் மனிதநேயத்துடன் ஆதரவற்ற இக்குழந்தைகளுக்கு கைகொடுக்க தமது சில வசதிகளை தியாகம்செய்ய முன்வருகின்றவர்கள் தமது பெயர்களை அந்தந்த நாடுகளில் உள்ள எமது கிளைகளில் பதிவுசெய்து கொள்ளலாம். பதிவுசெய்யும்போது குழந்தைக்குரிய ஓராண்டுக்கான சராசரித் தொகையாக 150 அமெரிக்க டொலர்கள் முற்பணமாகச் செலுத்தவேண்டும்.

மேற்படி தகவலுடன் சம்பந்தப்பட்டவர்கள் விரும்புகின்ற குழந்தைகளின் வயது தொடர்பான விபரங்களையும் பதிவுசெய்துகொள்ள முடியும். இவ்விபரங்கள் கிடைத்தவுடன் ஒவ்வொருவருக்காகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ள குழந்தைகளின் விபரம், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கிளைகளினூடாக அனுப்பிவைக்கப்படும். சம்பந்தப்பட்டவர்கள் குழந்தைகளுடனும் பாதுகாவலர்களுடனும் நேரடியாகத் தொடர்புவைக்கவும் தகவல்களைப் பெறவும் முடியும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாதாந்தம் அக்குழந்தைக்குரிய தொகையை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கிளையில் ஒப்படைக்கவேண்டும். இங்கு நாங்கள் மேற்படி குழந்தைக்குரிய தொகையை வழங்குவோம். குழந்தைகளின் உதவித்தொகை ஆண்டுக்கு ஆண்டு மாறுபடுவது கவனத்தில் எடுக்கப்படவேண்டும். இத்திட்டத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கிளைகள் மட்டுமல்லாமல் ஏனைய சங்கங்கள், சமூகநலனில் ஆர்வமுள்ள தனிநபர்கள்அனைவரும் பங்குபற்றமுடியும். ஒவ்வொரு பிரிவின தமது சுயமுயற்சியின்மூலம் எத்தனைபேரை இணைக்கின்றார்கள் என்ற விபரத்தினை எம்மால் வடிவமைக்கப்பட்ட படிவத்தின்மூல நாங்கள் அறிந்துகொள்ளமுடியும்.

இதனடிப்படையில் அதிகமான குழந்தைகளை பொறுப்பேற்பதற் காக உழைத்த எமது சர்வதேச கிளைகளும், அதிகமான குழந்தைகளைப் பொறுப்பேற்க உழைத்த சங்கங்களும், தனிநபர்களும் தனித்தனியாக கௌரவிக்கப்படுவார்கள்.

<u>தெரிவுசெய்யப்படும் குழந்தையின் தகுதி</u>

1. குழந்தை பெற்றாரை இழந்தவராக இருக்கவேண்டும், அல்லது
2. தந்தையை இழந்தவராக இருக்கவேண்டும், அல்லது
3. தாயை இழந்து தந்தையால் புறக்கணிக்கப்பட்டவராக இருக்கவேண்டும், அல்லது
4. தாய், தந்தையர் இருந்தும் இருவராலும் புறக்கணிக்கப்பட்டவராக இருக்கவேண்டும்,
5. 15 வயதுக்குட்பட்டவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். கல்வித் தகுதியினையும் தேவையையும்கருதி, வயதெல்லை உயர்கல்வி முடிவுவரை நீடிக்கப்படலாம்.

மாதாந்த உதவித்தொகையினை சீரான அளவில் மேற்கொள்வதற்காக அந்தந்த நாடுகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பொறுப்பாளர்கள் அந்தந்த நாட்டுப் பணத்தில் ஒவ்வொரு பிரிவினருக்கும் வழங்கவேண்டிய தொகையினை தீர்மானித்துக்கொள்வார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## குழந்தைகளின் தெரிவின்முன்னரும் தெரிவின்பின்னரும் சம்பந்தப்பட்ட பகுதியினருக்குரிய கடப்பாடுகள்:-

### 1. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கடப்பாடு

1. சமூகத்தில் மிகவும் வறிய, பெற்றோரை அல்லது தந்தையை இழந்த, கல்வியில் ஆர்வமுடைய குழந்தைகளை தெரிவுசெய்தல்.

2. இக்குழந்தைகள் சம்பந்தமாக பெறுகின்ற தகவல்களை பொருளாதாரநிலை தொடர்பாக கிராமசேவகர், உதவி அரசாங்க அதிபரிடமும் கல்விநிலை வகுப்பாசிரியர், தலைமை ஆசிரியர் என்றமுறையிலும் உறுதிப்படுத்தல்.

3. எவ்வகையில் இத்தகவல்களுக்கான முழுமையான பொறுப்பையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகமே ஏற்பதால் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நேரடி தகவல்களை உறுதிப்படுத்திக்கொள்வதுடன், இதுசம்பந்தமான சகல விடங்களுக்குமான முழுமையானபொறுப்பையும் நேரடியாக ஏற்கும்.

4. பொறுப்பேற்கப்படும் குழந்தைகளுக்காக வழங்கப்படும் உதவிகள், முழுமையாகப் பயன்படுத்தப்படுகின்றதா என்பதை மாதாந்தம் ஆராய்ந்து, திருப்திகரமாக உள்ளதை உறுதிப்படுத்திக்கொள்வதுடன், இதற்காக பொறுப்பேற்றவருக்கு வகைசொல்லும் பொறுப்பு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடையதாகும்.

5. பொறுப்பேற்க விரும்புகின்ற பெற்றாரின் விருப்பத்தேர்வுக்கு முடிந்தவரை இசைவாக குழந்தையை வழங்கும் கடப்பாடு, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினுடையது.

### 11. குழந்தையின் தற்போதைய பாதுகாவலருடைய கடப்பாடு

1. குழந்தையை ஒழுங்காகப் பராமரிப்பதையும் கல்வியை வழங்குவதையும் ஏற்று, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் ஒப்பந்தம் ஒன்றை செய்து- கொள்வதுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் குழந்தைக்கான கல்வியை, பராமரிப்பை முறையாக வழங்கவில்லையென்று கருதுமிடத்து, குழந்தையை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பொறுப்பேற்று விடுதியில்வைத்து பராமரிக்க அனுமதிக்கும். கடப்பாடுடைய பாதுகாவலராக பராமரிப்பாளர் இருப்பா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



2. தமிழர் புனர்வாழ்வுக் கழகமோ, பொறுப்பேற்கின்ற பெற்றோரோ அல்லது அவர்களால் அங்கீகரிக்கப்படும் நபர்களோ குழந்தையுடன் தொடர்புகொண்டு கலந்துரையாடவும் தகவல்களைப் பெறவும் உரிமை உடையவர்கள் என்பதை அங்கீகரிக்கவேண்டும்.

3. குழந்தையை பராமரிக்க பொறுப்பேற்றுள்ள பெற்றோர்சம்பந்தமான தகவல்களை வழங்குவதும், அவர்களிடம் இருந்து கிடைக்கின்ற கடிதங்களுக்கு பதில் அனுப்ப வழிகாட்டுவதும் இவர்கள்முன்னுள்ள கடப்பாடாகும்.

111. பொறுப்பேற்கும் பெற்றோரின் கடப்பாடு

1. ஒரு குடும்பத்தில் ஒருபிள்ளையை எவ்வாறு கவனிக்கின்றோமோ அதுபோல் இக்குழந்தை சுயமாகவழத் தொடங்கும்வரை பராமரிக்கவேண்டிய கடப்பாடு உள்ளது.

2. பாதுகாவலர் குழந்தையை முறையாகப் பராமரிக்கவில்லையென்று தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கருதுமிடத்து அல்லது பொறுப்பேற்ற பெற்றோர் கருதுமிடத்து இக்குழந்தையை நேரடியாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பொறுப்பேற்று பராமரிக்க, மேலதிக உதவி வழங்கவேண்டியது அவசியம்

www.tamilarangam.net

# Tamils Rehabilitation Organisation

Registered Charity No: 1010029
79 Hoe Street, Walthamstow, London E17 4SA

## STANDING ORDER

To: The Manager,

| BANK | | BRANCH | |
|---|---|---|---|

| ADDRESS | |
|---|---|

Please make monthly transfers to Tamils Rehabilitation Organization (T.R.O) Account No 40892580 Barclays Bank plc, Code 20-21-84 Clapham Junction Branch 7 St John's Hill, London SW11 1TR until this order is cancelled by me/us

| Signature(s) | | Date | |
|---|---|---|---|

| Name & Address | |
|---|---|

PLEASE DEBIT MY/OUR ACCOUNT NUMBER
( Please refer to your cheque book/ paying -in book ) / / / / / / / /

| AMOUNT OF MONTHLY PAYMENT | £ | |
|---|---|---|
| | ( in figures) | (in words) |

FIRST PAYMENT TO BE MADE ON .................... and thereafter monthly payments on the same day each month.

---

TAMILS REHABILITATION ORGANIZATION Reg. Charity No: 1010029

| Name of Donor | |
|---|---|

| Address | |
|---|---|

| | Telephone | |
|---|---|---|

| Name of Donor's Bank | | Branch | |
|---|---|---|---|

| Bank Address | |
|---|---|

| Amount of Monthly Donation | | Commencing Date | |
|---|---|---|---|

| Signature(s) | |
|---|---|

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்